RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-222813

# கண்ணதாசன் - பட்டுக்கோட்டையார் படைப்புகளில் தத்துவம்

**கி.பே. மோகனாம்பிகா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு-638012, தமிழ்நாடு, இந்தியா.

# Philosophy in Kannadasan and Pattukottaiyar's Works

**K.P. Moganambika** [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women, Erode-638012, Tamil Nadu, India

* Corresponding Author: ranimohanaphd@gmail.com

Received: 25-09-2022
Revised: 28-10-2022
Accepted: 07-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

At a time when uncivilized human society was in the history of the world, there was no intellectual environment at that time to moralize him. As the language developed, he gave his mute thoughts a form of expression. He gathered a collection of experiences he felt and tried to refine his life. It was then that he decided to give up hunting, create habitats to suit the way he produces and eats, and think about the importance of dressing up. The use of one's own knowledge is estimated to be the main factor for this dialectical change. It was this beginning that gave rise to today's knowledge society, which thinks centrally and using knowledge today. The whole form of this sphere of knowledge is called philosophy. The main purpose of philosophy is to promote the life of the individual and the social life which becomes synergistic with the life of each individual. The basis of philosophy is the formulation of the laws of life for everything, regardless of whether it is uyarthinai or akrinai. The Tamil poets Pattukottai Kalyanasundaram and Kaviyarasu Kannadasan, at the point of philosophy, similarly promote social welfare and individual welfare in many places. In particular, philosophy should not be confined to being developed according to the context; On the contrary, it should reach out to the common man. For this, both of them handle the literary base very well. It is noteworthy that the theoretical ideas they formulated, especially in film song forms and in simple terminology, have brought about many changes in Tamil society even today. The aim is to study comparatively these philosophical ideas expressed in the works of the two

**Keywords:** Kannadasan, Pattukottaiyar, Tamil Poets, Tamil society

## முன்னுரை

தத்துவம் என்பதனை 'மெய்யியல்' என்றும் அழைப்பர். இதற்கு நிகரான ஆங்கிலச் சொல்லாட்சி 'PHILOSOPHY' ஆகும். தத்துவம் என்பது அனுபவங்களில் இருந்து பெறப்பட்ட வாழ்வியல் புரிதல்களின் கட்டமைப்பு என எளிதாக வரையறுக்கலாம். தத்துவமரபின் தொடக்கமானது பகுத்தறிவின் தொடக்கமாகவே இன்றளவும் பார்க்கப்படுகிறது. ஏன்? எதற்கு? எப்படி? என்ற எண்ணில்லாத சுய கேள்விகளில் உலகியலைப் பகுத்தாராயும், மனித மனத்தின் உந்துதலால் இவற்றிற்கான விடைகளை அறிய உதவும் மனவுந்துதலே தத்துவமரபின் தொடக்கமாக இன்றளவும் பார்க்கப்படுகின்றது. அறிவினை அடியொற்றித்தான் தத்துவங்கள் முகிழ்த்தெடுக்கப்படுகின்றன. குறிப்பாக அறிவிற்கும் - உண்மைக்கும் இடையே உள்ள உறவினை அறிவியல் பூர்வமான பார்வை கொண்டு பார்ப்பதைத் தத்துவம் அடிகோலுகிறது.

“அரிஸ்ரோட்டல் உலகின் இயல்பை முழுமையாகக் காணுதலே மெய்யியல் என்றார்” (Sivanantha Moorthi, 1998).

அரிஸ்டாட்டில் உள்ளிட்ட கிரேக்க அறிஞர்கள், உலகியலைக் காணும் மெய்யியலை அறிவுக்கண் கொண்டு பார்த்தனர். மாறாகக் கருத்து முதல் வாதிகளைப் போல் கற்பனைக் கருத்துருவாக்கத்தில் இருந்த உலகியலைக் காணவில்லை. மேலும் உலகம் இயக்கம் பெறும் தன்மையிலிருந்து அதனோடு இயங்கும் உலகியல் உண்மைகளை உயிர்களின் நலனிற்கேற்பப் பயன்படுத்தவேண்டும் என்ற கருத்தும் நிலை நிறுத்தப்பட்டது. சமூக நோக்கோடு கருத்துக்களின் பயன்பாட்டு முறை அமைவதுதான் தத்துவத்தின் வெற்றி. இதனைக் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்று, கல்விமான்களாக உருப்பெற்றோர்க்கு மட்டுமே புரிகின்ற தத்துவங்களாகவே வரலாற்றுப் பதிவுகளில் காண இயலுகின்றது. பாமர மக்களுக்குச் சென்று சேர்கின்ற தத்துவங்கள்தான் மனித சமுதாயத்தின் அடிப்படையிலே மாற்றம் ஏற்படுத்தும்.

## கவிஞர்களின் கவிதைகளில் தத்துவ வெளிப்பாடு

கண்ணதாசன் - கல்யாணசுந்தரம் ஆகியோரின் கவிதைகளில் தத்துவ வெளிப்பாடு என்பது இன்பவியல் வெளிப்பாடு, துன்பவியல் வெளிப்பாடு இருவேறு நிலைகளில் காணப்படுகின்றது. இதில், இன்பவியல் வெளிப்பாடுகளில் விளையும் கருத்துக்களைக் காட்டிலும், துன்பவியல் வெளிப்பாடுகளில் வெளியாகும் தத்துவ மொழிகள் தான் கடைக்கோடி பாமரர்களுக்கும் சென்று சேர்ந்திருக்கிறது. இதற்கு ஒரு உதாரணத்தைக் காண்பிக்க இயலும். துன்பவியல் அடிப்படையில் மனித வாழ்வில் நிகழும் இறப்பு நிகழ்வினை ஒட்டி கண்ணதாசன் எழுதிய,

“வீடு வரை உறவு வீதி வரை மனைவி

காடுவரை பிள்ளை கடைசி வரை யாரோ?

ஆடும் வரை ஆட்டம் ஆயிரத்தில் நாட்டம்

கூடிவரும் கூட்டம் கொள்ளி வரை வருமா?” (Arunan 1995)

என்ற வரிகள் இடம்பெறுபவை 1962 ஆம் ஆண்டு வெளிவந்த பாதகாணிக்கை என்னும் திரைப்படத்தில் அமையப்பெற்றது. இன்றைக்கு (2021) ஏறத்தாழ 60 ஆண்டுகளாகவுள்ள நிலையிலும், இன்றளவிலும் இறப்பு நிகழ்வுகள் ஏற்படும் தமிழர் வீடுகளில் இப்பாடல் வரிகள் ஒலிபரப்பப்படுகின்றது. இந்தப் பாடல் வரிகள் வாழ்வின் நிலையாமை என்னும் தத்துவத்தைக் கூறுவதாகும். இருப்பினும் பாமரர்களுடைய இறப்பு வீடுகளில் இன்றளவும் பயன்படுத்தும் நிலையினை வைத்தே பாமரர்களிடம் கவிஞரின் கருத்து சென்று சேர்ந்திருக்கின்றது என்பதனை உய்த்துணர முடிகிறது.

“மனிதன் - ஆரம்பமாவது பெண்ணுக்கெள்ளே - அவன்

ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே

ஆராய்ந்து பார்மனக் கண்ணுக்குள்ளே

ஆத்திரங்கொள்ளாதே நெஞ்சுக்குள்ளே”

என்று உலகியலைப் பாடும் பட்டுக்கோட்டையார் பாடல்கள் அன்று கொள்கை முழக்கங்களாக மக்கள் திரளில் ஒலித்தன என்கிறார் (Kalyanasundaram & Jeeva Bharathi, 2000). முன்பு கூறியது போல இன்பவியல் கருத்துக்களின் வெளிப்பாட்டுப் பரவலைக் காட்டிலும் துன்பவியல் கருத்துக்களில் பரவலாக்கத்தின் திறத்தை மேற்கண்ட எடுத்துக்காட்டினை வைத்தே உணர முடியும். கண்ணதாசனும் கல்யாணசுந்தரமும் இந்த எளிமையாக்க உத்தியினை வைத்து சமூகத்திற்கும், தனி மனிதத்திற்கும் ஏற்பக் கருத்துக்களை வழங்கி இருக்கின்றனர்.

## இல்லற வாழ்வியல் தத்துவங்கள்

காதலிக்கும் காலகட்டத்தில் உண்டாகும் காதலுணர்வு குறித்தும், திருமணத்தின் பின் உண்டாகும் தலைவன் - தலைவிக்குமான காதல் உணர்வு குறித்தும் கவிதைகளை எழுதாத கவிஞர்களே இல்லை என்று கூறுகின்ற அளவிற்கு இலக்கியத்தில் காலத்தால் புறந்தள்ள இயலாத வகைப்பாடாக காதலுணர்வும் அதன் வெள்ளியாகிய இல்லறமும் அமைகின்றது. காதல் என்னும் நிலை தலைவன் - தலைவிக்கு இடையேயான தனிப்பட்ட உணர்வு வெளிப்பாடாக அமைகின்றது. இதிலிருந்து உருப்பெறும் இல்லறச் சூழலில்தான் இவர்களுடைய காதலுக்குச் சமூக அங்கீகாரம் கிடைக்கப்பெறுகின்றது. இவ்விரண்டும் சங்க காலம் முதற்கொண்டு இன்று வரையும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. களவு என்பது காதல் வாழ்க்கையையும், கற்பு என்பது இல்லற வாழ்வினையும் குறிக்கும் சங்ககாலச் சொற்பயன்பாடாகும். காதல் வாழ்வை வாழ்ந்து விட்டுத் திருமண வாழ்க்கைக்குச் செல்வோர் மற்றும் வீட்டாரின் வழிகாட்டுதலில் நிகழ்த்தப்பெற்ற திருமணத்தில் சேர்ந்த இணையர்கள் ஆகியோரின் சமூக இயங்கலில், இல்லற வாழ்வினை இன்ப துன்பங்களைப் பங்கிட்டு வெற்றிகரமாக நகர்த்திச் செல்வதை வைத்தோ இவர்களின் வாழ்க்கையின் வெற்றி தோல்வி சமூகத்தால் சீர்தூக்கப்படுகின்றது. இல்லறச்சூழல் என்பது சமூக வாழ்வியலுக்கான ஓர் இன்றியமையாத அங்கம். பிளவுகளின்றி சமூக நீரோட்டத்தில் இணைந்து செல்வதே இல்லறத்தின் வெற்றியென்று கூறலாம். இதனைத் திருவள்ளுவர் இல்லறம் என்னும் அதிகாரத்தில் சிறப்புறக் கூறியுள்ளார். அதில் ஒன்று,

“அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்பது இல்லாயின் நன்று”

இல்லற வாழ்க்கைதான் சிறந்த அறம் என்றும், இவ்வாழ்வினை மேற்கொள்வோரைப் பிறர் பழிக்காதவாறு இருப்பது மிகுந்த சிறப்பிற்குரியது என்கிறார் (Varadharasan, 2004). வாழ்வியல் தத்துவங்களில் குடும்ப முறை (கணவன் - மனைவி - குழந்தைகள் - மூத்தோர் - உறவினர் - நண்பர்கள்) சார்ந்த வாழ்வியல் தத்துவம் சமூக நீட்சிக்கு மிகுந்த பங்களிப்பதாலும், அதன் மூலம் சமூக அறங்கள் உருவாக வழியமைப்பதால் இல்லறவியல் கருத்துக்களைக் குறிப்பிடுவது இன்றியமையாததாகிறது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சமூக நோக்கோடு புறச்சார்புக் கருத்துக்களை எழுதினாலும் இல்லறம் தொடர்பான அகவியல் கருத்துக்களைத் தெளிந்த சொல்லாட்சிகளில் எளிமையாகக் கூறியிருக்கிறார். கண்ணதாசனோ தான் எழுதத் தொடங்கிய காலம் முதல் தனது இறுதிக் காலம் வரையில் எழுதியவற்றுள் இல்லறக் கருத்துக்கள் மட்டுமே ஆயிரக்கணக்கில் இருக்கும். இவ்வாறான இவ்விருவரின் இல்லறம் தொடர்பான தத்துவ மொழிகளைப் பின்வருமாறு காணலாம்.

இல்லறத்தின் அடிப்படையாக ஒற்றுமையும் அதன் மேலிட்ட மாசற்ற பரஸ்பர அன்பும் இருத்தல் வேண்டும். இல்லறத்தைக் கட்டி எழுப்புவது என்பது இத்தகைய கூட்டு முயற்சியின் வெளிப்பாடே ஆகும். அன்பின் உறுதிப்பாடுதான் காதல் வாழ்வு, திருமண வாழ்வு ஆகிய இரண்டின் வெற்றியினையும் தீர்மானிக்கின்றது. காதல் வாழ்வில் உறுதிப்பாடான மாசற்ற அன்பின் சிறப்பினைக் குறுந்தொகையில் உள்ள,

“யாயும் ஞாயும் யாராகி யாரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப்பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே”

என்னும் வரிகளில் அன்புடைய இருமணங்களின் இணைவினால் உண்டாகும் காதல் வாழ்வினைக் குறிப்பிடுகின்றார் (Nagarajan, 2004). காதல் வாழ்வில் பரஸ்பர அன்புப் பரிமாற்றம் திருமணத்திலும் இறுதிவரை நிலைக்கவேண்டும். அப்போதுதான் அன்புடை நெஞ்சங்களுக்குக் கிடைத்த வரலாற்று வெற்றி அதாவது ஏனையோர்க்கு சான்று என்று அமையும்

பட்டுக்கோட்டையார் புறவியத் தத்துவங்களை அதிகம் இயற்றியுள்ளமையைப் போன்றே காதல் வாழ்வு பற்றியும் இல்லறச்சூழல் குறித்தும் பாடல்களைப் இயற்றியுள்ளார். கண்ணதாசனுடைய இல்லறம் சார்ந்த அகவியற் பொருண்மையைச் சுட்டும் பாடல்கள் பலவும் இன்றளவும் பலரால் விரும்பிக் கேட்கப்பட்டு வருகின்றன. இவ்விருவருடைய கவிதைகளில் இல்லறம் சார்ந்த தத்துவப் பொருண்மை காட்டும் கருத்துக்களை ஒப்பீட்டு முறையில் ஆராயலாம்.

மாசற்ற அன்பு என்னும் உள்ளுணர்வுதான் இல்லற வாழ்வினுக்கு அடிப்படையாக அமைகின்றது. இதனைக் குறிப்பிடும்படியாக பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்,

“பாசத்தால் எனையீன்ற அன்னை தந்தை

பதை பதைத்து நிற்கின்றார் மகனைக் காண

பேசத்தான் வார்த்தையில்லாக் கற்பு மங்கை

பிடியென்றாள் தன்னுயிரைக் கணவன் வாழ

மாசற்ற அன்புக்கு மரணம் உண்டோ?”

இதில் நிகழ்வு ஒன்றின் மூலம் அன்பின் வலிமையை உரைக்கிறார் (Kalyanasundaram & Jeeva Bharathi, 2000). கணவன் ஒருவன் ஏதோ ஒரு காரணத்தால் உயிர்போக நேரிடுகிறது. உயிர் போகவுள்ள கடைசி நேரத்தில் அவனை ஈன்ற தாய், தந்தையரோ துன்பத்தின் உச்சிக்கே சென்று செய்வதறியாது உழல்கின்றனர். அந்நேரத்தில் கணவனுக்குத் தன்னுயிரைக் கொடுக்க முயலவதாகப் புனைவின் அடிப்படையில் அன்பு பற்றிய பார்வையினைப் பட்டுக்கோட்டையார் விவரிக்கின்றார். தமிழ்ச் சூழலில் குடும்ப அமைப்பு முறையானது குடும்பத் தலைவனின் உழைப்பு, தியாகத்தை அளவிடும் சமூகப்பார்வையில் குடும்பத் தலைவியின் உழைப்பினையும் தியாகத்தை அளவிடும் பார்வை முரணானதாகவே இருந்து வருகிறது, இதற்குக் காரணமாக பெண்களின் உடல் வலிமையின்மையையும், வீட்டுப்பணிக்காகவே பிறப்பு என்பதனையும் வலிந்து சமூகம் தள்ளிவிட்டது என்றுதான் குறிப்பிடவேண்டும். இந்தக் கருத்தியல் பார்வையில் மனைவி என்னும் பொறுப்பினையேற்கும் பெண்ணினைக் காண்கையில், குடும்பத்தலைவனின் பொறுப்பில் அதிக இடம் பங்கெடுப்பதாகவே மதிப்பிடுவர். ஆனால் இவை மறைக்கப்படுகின்றன. இல்லறத் தத்துவம் மனைவியாகிய பெண்ணின் தியாக உணர்வில் கட்டமைக்கப்படுகிறதைத் தான் கல்யாண சுந்தரம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள புனைநிகழ்வில் குறிப்பிடுகிறார். தன் கணவனை ஈன்ற பெற்றோர்களால் துன்பத்தை வெளிப்படுத்தமுடிகிறது; ஆனால், மனைவிதான் தன் உயிரை மாய்த்தாவது கணவன் உயிரைக் காப்பாற்ற முடிகிறாள். இது மனையாளின் தியாகப் பண்பின்பாற் படும். இதுபோன்ற நிகழ்வினைக் கண்ணதாசன் பாலும் பழமும் என்னும் திரைப்படப்படத்தின் பாடல்வரிகளில் காண இயலும்.

“பிஞ்சு முகத்தின் ஒளியிழந்தாயே

பேசிப் பழகும் மொழி மறந்தாயே

அஞ்சி நடக்கும் நடை மெலிந்தாயே . . .

ஈன்ற தாயை நான் கண்டதில்லை

எனது தெய்வம் வேறெங்கும் இல்லை

உயிரைக் கொடுத்தும் உனை நான் காண்பேன்

உதய நிலவே கண் மலர்வாயே”

இந்தப் பாடல் இடம் பெற்ற பாலும் பழமும் படத்தில் இதற்கான நிகழ்வாக மனைவி காசநோயால் தாக்குண்டு உயிர்வாழப் போராடத்துடிக்கிறாள் (Kannadasan, 2012). அப்போது, நோயவாய்ப்பட்ட மனைவியின் முகம் பொழிவிழப்பு, குரல் மங்குதல், நடை மெலிவு போன்ற உடல் பிரச்சனைகளையெல்லாம் விளக்கிக் கூறிவிட்டு, கணவன் தன்னுடைய உயிரை மனைவிக்கு

அளித்தாவது காப்பாற்றுவேன் என்றும் நிம்மதியாக உறக்கம் கொள் என்று அன்பு மொழியை அளிப்பது போன்று கண்ணதாசன் பொருத்தமான காட்சிக்குப் பொருத்தமான வரிகளை இட்டிருக்கிறார். முன்னைய பாடலில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் வரிகளில் கணவனின் துன்பத்திற்கு மனைவி உயிரைக்கொடுத்துக்காப்பது போலவும், பின்னைய கண்ணதாசன் வரிகளில் மனைவியினைக் காப்பாற்ற கணவன் உயிர்தந்து காப்பது போலவும் ஒப்பீட்டளவில் கணவன் - மனைவி வாழ்வில் மிகு துன்பம் நிலவுகையில் ஏற்படும் உளவியல் வெளிப்பாட்டினைக் காண இயலுகின்றது.

## வாழ்க்கையும் வருவாயும் - தத்துவ ஒப்பீடு

மனித வாழ்க்கையில் மிக அடிப்படையாக அமைவது 'வாழ்க்கை என்றால் இன்னது' என்று மனிதன் தனக்குப் புரியப்படுத்துவதே ஆகும். இலக்கிய ஆக்கங்கள் வாழ்வியலைப் பற்றி அதிகம் எழுந்த காலகட்டத்தில்தான் மனிதம் செழித்திருந்தது. எடுத்துக்காட்டாக, சங்க இலக்கியங்கள் வாழ்வியலுக்கே முதன்மை இடம் அளித்துக் கருத்துக்களை வழங்கின. மனித வாழ்வில் சுமைகள் இருந்தாலும் அவற்றைத் தன்னம்பிக்கை கொண்டு வென்று வாழ்வை நிறைவு செய்யவேண்டும் என்ற கருத்துக்களை வழங்கின. வாழுகின்ற காலகட்டத்தில் தமக்கும் உதவியாக, மற்றவர்களுக்கு உதவும்படியாக வாழவேண்டும் என்கிறது. நவீன இலக்கியங்கள் பகுத்தறிவின் அடிப்படையில் இயங்கத் தொடங்கியதால் வாழ்வியலின் அனைத்து மூலைகளிலும் உள்ள அனுபவங்களை ஆய்ந்து வாழ்வியல் கருத்துக்களை அளிக்கின்றன. திரைத்துறையில் இந்த முறையைத் தொடங்கிவைத்தவர்கள் பலர். மருதகாசி, உடுமலை நாராயணகவி, கல்யாணசுந்தரம், கண்ணதாசன், மு.கருணாநிதி என்று இப்பட்டியல் நீளும். இதில் கல்யாணசுந்தரமும் கண்ணதாசனும் பாமர மக்களுக்குச் சென்றடையும் வாழ்வியல் கருத்துக்களை மிகத் தெளிவாகக் கையாண்டதால் ஏனையோரின் திரைப்பாடல்களை விட இவ்விருவரின் திரைப்பாடல்கள் இன்றளவும் உயிர்ப்போடு பயன்பாட்டளவில் உள்ளன.

வாழ்க்கை என்பது ஒரு தொழிற்பெயர். அதாவது வினையின் காரணமாக வந்த பெயர். இயங்கியலை முழுமையாகச் சுமந்ததும் கூட. சவால்களை எதிர்கொண்டு வாழ்வினை நிறைவு செய்வதே முழுமையான வாழ்க்கை. இன்பங்களின் அனுபவிப்புகளை விட துன்பங்களின் அனுபவிப்புகள்தான் வாழ்க்கையை நல்லக் கட்டுக்கோப்பின்கீழ் கொண்டுவரும். எனவே வாழ்க்கையைப் பற்றிய புரிதல்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னளவில் ஏற்படவேண்டும் என்று கருதி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும், கண்ணதாசனும் படைப்புகளைத் தந்துள்ளனர்.

"மயக்கமா கலக்கமா..?

மனதிலே குழப்பமா..?

வாழ்க்கையில் நடுக்கமா..?

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்..

வாசல் தோறும் வேதனை இருக்கும்..

வந்த துன்பம் எதுவென்றாலும்..

வாடி நின்றால் ஓடுவதில்லை..

வாடி நின்றால் ஓடுவதில்லை..

எதையும் தாங்கும் இதயம் இருந்தால்..

இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்.."

என்ற வரிகளில் கண்ணதாசன் மனித வாழ்வியலில் அடிப்படைக் கட்டமைப்பைக் கூறுகிறார் (Kannadasan, 2012). இதில் அடிப்படைக் கட்டமைப்பு என்பது அறிவு நிலையால் உலகியலைப் புரிந்துகொள்ளும் நிலைமை ஆகும். இந்த பெற்றோரின் அரவணைப்பிலும் அவர்களது செல்வங்களிலும் வளர்ந்த பிள்ளைகளுக்கு வாழ்வினை நகர்த்துவதற்கான இடர்கள் தெரிவதற்கான வாய்ப்புகள் இல்லை.

கல்வி முடித்துவிட்டுக் குடும்பச்சூழலை மேற்கொள்ளும்போதுதான் குடும்பத்தலைவன் என்கின்ற முறையில் நாட்களை நகர்த்துவதற்கானக் கடினங்களை உணர்வர். அப்போது ஏற்படும் வேலையின்மை, குறைவு ஊதியம், குடும்பப்பிரச்சனை என எண்ணிலடங்கா சிக்கல்களைக் குடும்பத்தலைவனோ அல்லது தலைவியோ காண நேரிடுவர். இதனால் உருவாகும் மன வருத்தங்களை உளவியல் ரீதியாக எதிர்கொண்டு நம்பிக்கை ஏற்படுத்த சிலரின் அறிவுரை மொழிகள் உதவும். இதன் அடிபடையில்தான் கண்ணதாசன் மேற்காணும் பாடலை அமைக்கின்றார். ஆயிரம் சோதனைகள் நம்மைச் சுற்றி இருந்தாலும் நாம் அப்பொழுது வாடியிருப்பதைக் கண்டு அவையெல்லாம் மறைந்து விடும் என்பது அறியாமை என்றும் நமக்குள்ளாக இறைந்து கிடக்கும் நம்பிக்கையினை எழுப்பி அதன் துணைகொண்டு சோதனைகளைச் சாதனை ஆக்கவேண்டும் என்றும் கண்ணதாசன் கூறுகிறார். நம் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் நமக்குள் இருக்கும் நம்பிக்கையைக் கைவிட்டுவிடாமல் முன்னேறவேண்டும் என்பதனையும் உய்த்துணர வேண்டும். இந்தப் பாடலை வாழ்வியலின் அனைத்து நிலைக்குக் கொண்டு சென்றாலும், இப்பாடல் இடம் பெறும் சுமைதாங்கி திரைப்படத்தில் வாழ்வாதாரமின்றி உழலும் கதைத்தலைவன் பாத்திரப் படைப்பிற்காகத் தான் எழுதி இருக்கிறார். ஆகவே இங்கு கூறப்படும் வேதனைகள் என்பது வாழ்வாதாரத்தின் அடிநாதமாக விளங்கும் பணம் அல்லது வருவாய் இன்மையைத் தான் குறிப்பிடுகின்றது. இது போன்ற கருத்தினைப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், நய்யாண்டி மொழிநடையில் வருவாய் இழப்பினைப் பின்வருமாறு பதிவு செய்கின்றார்.

“மாசம் முப்பது நாளும் உழைச்சு

வறுமை பிடிச்சு உருவம் இளைச்சு

காசை வாங்கினாக் கடங்கார னெல்லாம்

கணக்கு நோட்டாட நிக்கிறான் - வந்து

எனக்கு உனக்குன்னு பிய்க்கிறான் . . .

ஒன்னுக்குப் பத்தா செல்வத்தைப் படைச்சான்

உலகம் நிறைய இன்பத்தப் படைச்சான்

என்னைப்போல பலயும் படைச்சு . . .

இதுக்கும் அதுக்கும் ஏங்க வைச்சான்

ஏழைய கடவுள் ஏன் படைச்சான்?”

என்கிறார் (Kannadasan, 2012). இதில் ஏழ்மையிலிருந்து மீளும் வழியை மேற்கூறப்பட்ட பாடலில் கூறவில்லை. தமது ஏழ்மைக்கானக் காரணமாக வருவாய் போதவில்லை என்பதைத் தான் முன்னிலைப்படுத்துகிறார். முன்பு கொடுக்கப்பட்டுள்ள கண்ணதாசனின் பாடலும், மேலே சுட்டப்பட்டுள்ள பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடலும் குடும்பத்தினை வழிநடத்திச் செல்வோருக்காக எழுதப்பட்டது. கண்ணதாசன் வேலையில்லாததால் வருமானமின்றி பரிதவிக்கும் குடும்பத் தலைவனின் புலம்பலாகப் படைத்துள்ளார். பின்னைய பாடலில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் வேலையிலிருந்தும் அதிலிருந்து பெரும் வருமானத்தின் போதாமையால் பரிதவிக்கும் தன்மையினைக் கூறுகிறார். ஏழைமக்களும் நடுத்தர வர்க்கத்தினரும் இவ்விரு நிலையிலும் துன்பங்களைத்தான் அனுபவிக்கின்றனர். இதில் தத்துவார்த்தமாகக் கண்ணதாசன் மட்டுமே தளராமல் நம்பிக்கையோடு இருந்து உழைத்து முன்னேறி துன்பங்களைத் துடைக்கவேண்டும் என்கிறார். ஆகவே ‘தளராமல் நம்பிக்கையாக இருக்கவேண்டும்’ என்பதுதான் கண்ணதாசனின் தத்துவமொழியாக உள்ளது.

## மூட நம்பிக்கை எதிர்ப்பு (பகுத்தறிவுக் கருத்துக்கள்)

அறிவைக் கொண்டு ஆராயாமல் மரபு என்னும் வழிநின்று நோக்கும் நிலையைக் குறிப்பிட பகுத்தறிவாளர்கள் மூடநம்பிக்கை (SUPERSTITATION) என்னும் பதத்தைப் பயன்படுத்துவர். குறிப்பாக

அறிவியல் அடிப்படையில் ஒன்றினை அணுகுவதை ஊக்குவிப்போரால் இச்சொல் அதீதமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏன்? எப்படி? எவ்வாறு? என்று அறிவின் வெளிப்பாடாகிய கேள்விகளுக்கு விடைகள் தேடும் போக்கினைப் பகுத்தறிவுவாதம் பேசும். இதற்கு எதிரான பாங்கினை மூடநம்பிக்கை கொண்டிருக்கும். மூட நம்பிக்கை தோற்றம் பெற்றது மனிதன் தான் கொண்ட அச்சங்களின் அனுபவங்களிலிருந்துதான் என்பது அறிஞர்களின் கூற்று. தத்துவம் என்பது உண்மையை அடியொற்றித்தான் இருக்கவேண்டும். கற்பனையான நம்பிக்கையை அடியொற்றி அமையக்கூடாது. திருக்குறளில் இரண்டு குறட்பாக்கள் மூட நம்பிக்கை எதிர்த்து அதாவது கற்பனையான நம்பிக்கையை எதிர்த்து மனித முயற்சியின் மீது நம்பிக்கை வைக்க வேண்டிய பகுத்தறிவுக் கருத்தியலை முன்வைக்கின்றது.

“தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்” (Varadharasan, 2004) மற்றும்,

“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகியற்றி யான்.” (Varadharasan, 2004)

திரைத்துறையிலும் இலக்கியப்பரப்பிலும் கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஆகியோர் மனிதனின் தன்னம்பிக்கையை வலுவிழக்கச்செய்து தன்னை வளப்படுத்திக்கொள்ளும் வைதீக மத அதிகாரக் கட்டமைப்பை எதிர்த்து ஆக்கங்களைச் சாமானியனுக்குப் புரியுமளவிற்கு, எளிய நடையில் தந்தனர். அதனால் அவை காலங்கடந்தும் நிலைத்து நிற்கின்றன. மரபுப்பாதையில் ஒன்றினை அணுகாமல் அறிவின் அடிப்படையில் அணுகவேண்டிய தேவையையும் வலியுறுத்தினர். பகுத்தறிவின் தேவையினையும் குறிப்பிடுகின்றனர். கற்பனையான நம்பிக்கைகள் தத்துவங்களாக மாறுவது சிக்கலுக்குரியது. உண்மைக்காரணிகள் தத்துவங்களாக மாற்றம்பெற இவை பெரிதும் தடையாக இருக்கும்.

“விதியென்று ஏதும் இல்லை

வேதங்கள் வாழ்க்கை இல்லை

உடலுண்டு உள்ளம் உண்டு

முன்னேறு மேலே மேலே!”

என்று கண்ணதாசன் கூறுகின்றார் (Kannadasan, 2012). வாழ்வியல் கருத்துக்கள் அனைத்தும் அனுபவங்களின் வெளிப்பாடாகவேதான் தமிழ்ச்சூழல் அமைகின்றன. விதி என்னும் அறிவிற்குப் புலப்படாத நம்பிக்கையைக் கொண்டு வாழக்கூடாது. மேலும் கற்பனையான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்த நிகழ்காலத்தைத் தொலைத்துவிடக்கூடாது என்றும் இவ்வரிகளில் கண்ணதாசன் குறிப்பால் உணர்த்துகின்றார். மனித உழைப்பும், மனிதம் பற்றிய மனிதர்களின் சுயத்தேடலும் இவற்றைக் கொண்டுள்ள இயற்கைச் சூழலமைப்புதான் வாழ்க்கையினை முன்னேற்றும் என்று மேற்கண்ட கருத்தின் வழி உலகியல் உண்மை புலப்படும்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் மூடநம்பிக்கை எதிர்ப்பு பற்றி பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்

“வேப்பமர உச்சியில் நின்னு பேயொன்னு ஆடுதுன்னு

விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க உன்

வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க

வேலையற்ற வீணர்களின் மூளையற்றவார்த்தைகளை

வேடிக்கையாகக் கூட நம்பி விடாதே நீ

வீட்டுக்குள்ளே பயந்துகிடந்து வெம்பி விடாதே” (Kalyanasundaram & Jeeva Bharathi, 2000)

வேப்பமர உச்சியில் பேய் ஆடிகின்றது என்பது குழந்தைகளை அதிகமாக விளையாட வெளியே செல்வதைத் தடுக்க அச்சமூட்டுகின்ற வகையில் பொய்க்கதைகளை அல்லது புனைகதைகளை ஏற்படுத்திக் கூறுவர். இவ்வாறு நம்புவதைப் போன்று புனை கதைகூறும் மரபு தமிழில் காலந்தோறும் இருந்து வருகிறது. அவை மரபுப்பார்வையில் கதையின் பொருளைப் பார்க்காமல் அறிவின் பாதையில் பார்த்தால் அது குழந்தைகளை மட்டுமல்ல வயதிற்கு வந்தோர், வயதானோர் என்ற அனைத்து வயதினரையும் மூடத்தனத்திற்கு இதுபோன்ற மாயாவாத புனைகதைகள் அச்சமூட்டி அறிவை மழுங்கடித்திருக்கின்றது என்பதனை உய்ததுணர முடிகிறது.

"தானாய் எல்லாம் மாறும் என்பது

பழைய பொய்யடா - எல்லாம் பழைய பொய்யடா"

என்று குறிப்பிடுகின்றார். கண்ணதாசனும் கல்யாணசுந்தரமும் பகுத்தறிவுப் பரப்புரையில் வேறுவேறு தளத்தில் பயணித்தவர்கள். கல்யாணசுந்தரம் இறுதி வரையில் பொதுவுடைமை வாதியாகவே இருந்தமையால் தன்னியல்பாகவும், கூறுகின்ற கருத்துகள் அனைத்திலும் பகுத்தறிவுக் கருத்தினையும் அறிவிற்கு முதன்மை இடம் தரும் பாங்கினையும் உய்த்துணர முடிகிறது. ஆனால், கண்ணதாசன் திராவிட இயக்கத்தில் இருந்துபோதும் பின்பு அதிலிருந்து பிரிந்த போதும் இறைக் கோட்பாட்டையும், ஆன்மிகம் சார்ந்த சிந்தனைகளையும் வெளியிட்டார்.

## முடிவுரை

'தத்துவம்' என்னும் தலைப்பிலான, சமகாலச் சூழலில் முறையற்றுக் கிடக்கின்ற வாழ்வியல் நெறிகளைப் பொருண்மையாகக் கொண்டு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களும் கவியரசு கண்ணதாசன் அவர்களின் பாடல்களும் தரும் தீர்வுகளை முன்னிறுத்துவதைக் குறிப்பிடப்பட்டுள்ளன. சமகாலச் சூழலில் அதிகம் பாதிப்பிற்குள்ளாகும் சமூக நிலையாகக் குடும்ப அமைப்பு முறை இருக்கின்றது. இல்லறத்தில் கணவன் - மனைவியிடம் இருக்கவேண்டிய அன்புப் பரிமாற்றம், குடும்ப உறவுகளை அரவணைத்துச் செல்லுதல் போன்ற அகவியக் காரணிகளையும் இரு கவிஞர்களின் படைப்புக் கருத்துக்களின் வழி ஆராயப்பெற்றுள்ளன. சமகாலத் தன்மையைச் சான்றாகக் கொண்டு தனிமனிதம் சார்ந்த, உலகியல் உண்மைசார்ந்த தத்துவார்த்தக் கருத்துக்களை இவ்வியல் ஆய்ந்துள்ளது.

## References


Arunan (1995) Kannadhasan Kavidhaigalil Vanna Kolankal, Kumari Padhipagam, Nagapattinam, India

Kalyanasundaram, P., Jeeva Bharathi, (2000) Pattukottaiyar Padalkal, Vairam Veliyedu, Chennai, India

Kannadasan, (2012) Kannadhasan Kavidhaigal, Kannadasan Padhipagam, Chennai, India

Nagarajan, V. (2004) Kurunthokai, New Century Book House (P)Ltd, Chennai, India.

Sivanantha Moorthi, (1998) Philosophy An introduction Part 1, Ampal Publication, Puthur, Srilanka

Varadharasan, M. (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License